# சுபீட்சம்

சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள www.supeedsam.com

வெள்ளிக்கிழமை 13.09.2024 supeedsam.com supeedsam@gmail.com


# என்னை எந்த கட்சித் தலைவர்களும் பேசுவதற்காக அழைக்கவில்லை

## அழைத்தாலும் நான் செல்வதாக இல்லை - அரியநேத்திரன்



தமிழ் பொது வேட்பாளர் என்ற ரீதியில் என்னை எந்த பிரதான கட்சித் தலைவர்களும் பேசுவதற்காக அழைக்கவில்லை. அவ்வாறு அவர்கள் அழைத்தாலும் நான் செல்லப்போவதில்லை. நான் எடுத்த இந்த முடிவில் இறுதி வரை பயணித்தே தீருவேன் என தமிழ் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் வியாழக்கிழமை (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## எமது இறுதித் தீர்மானம் இதுவே மீண்டும் அழுத்தமாகத் தெரிவித்துள்ள சுமந்திரன்

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கின்ற முடிவில் எந்த மாற்றங்களும் இல்லை என இலங்கைத் தமிழரசுக் கட்சி மீண்டும் அறிவித்துள்ளது.

சஜித் பிரேமதாசவைத் தவிர ஏனைய எந்த வேட்பாளர்களுடனும் பேச்சுவார்த்தை எதுவும் நடத்தப் போவதில்லை எனவும் ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவில் எந்த மாற்றமும் இல்லை எனவும் அறிவித்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதானிகள் குழு ஒன்று அண்மையில் கூடி இந்த முடிவை உறுதி செய்ததாக அக்கட்சியின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் தமது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

கட்சியின் மத்திய செயற்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அமுலாக்குவது குறித்தே தற்போது ஆராயப்படுகிறது என்றும் சுமந்திரன் கூறியுள்ளார்.

## பழிதீர்ப்பதற்காக தமிழ் அரசியல் கைதிகளை 30 ஆண்டுகளாக இலங்கை அரசாங்கம் சிறையில் வைத்திருக்கிறதா?



அரசும் அதன் அதிகாரமும் தான் எமது தமிழ் அரசியல் கைதிகளை பழிதீர்க்கும் போக்கில் 30 ஆண்டுகளாக சிறைக்குள் தடுத்து வைத்துக்கொண்டிருக்கின்றதா என குரலற்றவர்களின் குரல் அமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

தேசிய சிறைக்கைதிகள் தினமான வியாழக்கிழமை (12) யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அமைப்பினர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயகப் பெயர் கொண்டமைந்துள்ள இலங்கை நாட்டில் 116ஆவது

02 ஆம் பக்கத்தில்...

## எனது ஆட்சியில் அரசியல் தலையீடின்றி அரச சேவைகள் முன்னெடுக்கப்படும்!

ஜனாதிபதித் தேர்தல் வெற்றியுடன் நாட்டின் அனைத்து துறைகளிலும் அரசியல் தலையீடின்றி சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாச தலைமையில் இடம்பெற்ற ஒற்றுமை விளையாட்டு மாநாட்டில் கலந்து



## தேர்தலை புறக்கணிக்குமாறு பிரச்சாரம்; கஜேந்திரன் அணியினரிடமிருந்த துண்டுப்பிரசுரங்களை கையகப்படுத்திய போலிஸார்



நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்குமாறு கூறி தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட அணியினர் (12) முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர்.

அந்தவகையில் இன்று மதியம் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் துண்டுப்பிரசுரங்களை

02 ஆம் பக்கத்தில்...

## திருகோணமலையில் அதிகரித்துவரும் சிங்களக் குடியேற்றங்கள்

யுத்தத்தின் பின்னர் கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்தும் இராணுவக் கண்காணிப்பின் கீழ் இருக்கும் திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மக்களின் ஆதிக்கம் விரிவடைந்துவருகின்றது.

வடக்கு, கிழக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஒன்றிணைந்த தாயகம் என்ற கோட்பாட்டை இல்லாமல் செய்யும் அதேவேளை,

02 ஆம் பக்கத்தில்...




# அம்பிலாந்துறையில் அரியத்ததை ஆதரித்து கூட்டம்






(எருவில் துசி)

அம்பிலாந்துறையில் தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் அவர்களை ஆதாரித்து கூட்டம் ஒன்று (11) நடைபெற்றது.

கூட்டத்தில் பங்குபற்றியவர்கள் எதிர்வரும் தேர்தலில் தமிழர்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் அதிகளவு மக்கள் தமிழ் தேசிய உணர்வுடன் செயற்படுவதாகவும் கருத்து தெரிவிக்கப்பட்டது மேலும் தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் அவர்கள் கலந்துரையாற்றும் போது தமது பொது வேட்பாளர் நியமனத்தை பல்வேறு தரப்பினர் ஆரம்ப காலத்திலே எதிர்த்த போதிலும் தற்போது மக்கள் தமக்கு அதிகளவு ஆதரவினை வழங்குவதோடு புலம்பெயர் தமிழர்களும் தமக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கிக் கொண்டிருப்பதாகவும் இந்த தேர்தலில் அழிக்கப்படுகின்ற தமிழரின் ஒவ்வொரு வாக்கும் எமது எதிர்கால அரசியல் நிலைப்பாட்டையும் தமிழ் மக்களின் இன பிரச்சினைக்கான தீர்வாகவும் அமையும் எனவே இந்த வாக்களிப்பானது சிங்கள தலைவர்களுக்கு எடுத்துரைக்க வழி அமைக்கும் எனவும் கருத்துரைத்தோடு மக்கள் தமக்கு இரத்தத் திலகம் இட்டுக் கூட வரவேற்பதாகவும் எதிர் வருகின்ற 21 ஆம் திகதி எமது தமிழ் தேசிய உணர்வாளர்கள் தமிழ் தேசிய சிந்தனையுடையவர்கள் தமிழ் மக்கள் நன்கு சிந்தித்து வாக்களிக்க வேண்டுமென தனது கருத்துரையில் தெரிவித்தார்.

## இலங்கை வரலாற்றில் முதன் முறையாக Air- Ship சேவை
## கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உடன்படிக்கை கைச்சாத்து

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தெற்காசியாவில் முதன் முறையாக இலங்கையில் Air& Ship சேவையை ஆரம்பிக்கும் ஒப்பந்தம் சர்வதேச Air Space நிறுவனத்தின்

தலைவர் ஷுகரேவ் செர்ஜி நிகோலாவிச்க்கும், கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்திற்கும் இடையில் (12) ஆளுநர் தலைமையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் சுற்றுலா துறையை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

திருகோணமலையில் உள்ள நிலாவெளி, மட்டக்களப்பில் உள்ள பாசிக்குடா, அம்பாறையில் உள்ள அரறுகம்பே போன்ற சுற்றுலா தளங்களின் இயற்கை அழகை ரசிக்கும் வகையிலும், பயணத்தை இலகுபடுத்தும் நோக்கிலும் பறக்கும் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க இவ்வேலைத்திட்டமானது எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.



## தேர்தலை புறக்கணிக்குமாறு பிரச்சாரம்;

விநியோகம் செய்து பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்ட போது குறித்த பகுதிக்குச் சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட சிலரை இடைமறித்து அவர்களிடம் இருந்த துண்டுப்பிரசுரத்தை பெற்று அதில் உள்ள விடயங்கள் தொடர்பில் கேட்டபோது இரண்டு தரப்பினருக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியுள்ளது.

பின்னர் புதுக்குடியிருப்பு பொலிசாரால் முல்லைத்தீவு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் அந்த இடத்துக்கு வருகைதந்து குறித்த துண்டுப்பிரசுரத்தை பார்வையிட்டனர்.

இதன்போது தேர்தல் செலவீனங்களை மதிப்பிடுவதற்காக துண்டுப்பிரசுரங்களில் அச்சகத்தின் பெயர் கட்டாயம் அச்சிடப்பட்ட வேண்டும் எனவும் ஆகவே அவ்வாறு அச்சக பெயருடன் கூடிய துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்குமாறு கூறி அவர்கள் கைவசமிருந்த ஒருதொகை துண்டுப் பிரசுரங்களை பொலிசார் கையகப்படுத்தியதோடு அவர்களை விடுவித்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எனது ஆட்சியில் அரசியல் தலையீடின்றி அரச சேவைகள் ...

கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்துள்ளதாவது விளையாட்டுத்துறையில் உலகளவில் சாதனை படைத்த பலர் நம் நாட்டில் உள்ளனர். ஆனால் அவர்களுக்கான நலத்திட்டங்கள் எதுவும் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. 21 ஆம் திகதியின் பின்னர் இந்த நாட்டின் விளையாட்டுத்துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படும். விளையாட்டுத்துறைக்கான தேசிய கொள்கைதிட்டம் ஒன்றை உருவாக்குவோம். ஆட்சிக்கு வந்து மிகவும் குறுகிய காலத்திற்குள்ளேயே நாம் அதனை நடைமுறைப்படுத்துவோம். பாடசாலை வலய மட்டத்தில் மாகாண மட்டத்திலும் தேசிய சர்வதேச மட்டத்திலும் விளையாட்டுத்துறையில் உள்ள திறமைசாலிக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

அது மாத்திரமல்ல தேசிய விளையாட்டு நிதியம் ஒன்று ஸ்தாபிக்கப்படும் இவ்வாறு சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

## திருகோணமலையில் அதிகரித்துவரும் சிங்களக் குடியேற்றங்கள்

அவர்கள் செறிந்துவாழும் பகுதிகளில் அவர்களது சரித்திரம் மற்றும் கலாசாரம் என்பவற்றை முற்றாக அழிப்பதே இந்த நில அபகரிப்பு முயற்சிகளின் பிரதான இலக்காகும் என த ஒக்லன்ட் இன்ஸ்டிடியூட்டினால் வெளியிடப்பட்டுள்ள நில அபகரிப்பு தொடர்பான புதிய ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் இயங்கிவரும் 'த ஒக்லன்ட் இன்ஸ்டிடியூட்' என்ற கல்வியகத்தின் ஸ்தாபகரும் நிறைவேற்றுப்பணிப்பாளருமான அனுராதா மிட்டால்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் இயங்கிவரும் 'த ஒக்லன்ட் இன்ஸ்டிடியூட்' என்ற கல்வியகத்தினால் திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் நில அபகரிப்புக்கள் தொடர்பான தரவுகளையும், ஆவணப்படுத்தல்களையும் உள்ளடக்கிய 'ஆக்கிரமிப்பின் கீழ் திருகோணமலை: இலங்கையில் தமிழர் தாயகத்தை இலக்கு வைக்கும் நில அபகரிப்பு' எனும் தலைப்பிலான 32 பக்க ஆய்வறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் அபிவிருத்தி என்ற போர்வையில் இலங்கையில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டு குடியேற்றங்கள் நிறுவப்பட்டிருப்பதாகவும், 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதிலிருந்து இக்குடியேற்றங்கள் அதிகரித்திருப்பதாகவும் அந்த ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுடன், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை வலுவற்றவர்களாக்கும் பொருட்டு அரசாங்கங்கள் மற்றும் இராணுவத்தினரால் கையாளப்பட்டுவரும் பலதரப்பட்ட உத்திகள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது.

'யுத்தத்தின் பின்னர் கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்தும் இராணுவக் கண்காணிப்பின் கீழ் இருக்கும் திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மக்களின் ஆதிக்கம் விரிவடைந்துவருகின்றது. வடக்கு, கிழக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஒன்றிணைந்த தாயகம் என்ற கோட்பாட்டை இல்லாமல் செய்யும் அதேவேளை, அவர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் அவர்களது சரித்திரம் மற்றும் கலாசாரம் என்பவற்றை முற்றாக அழிப்பதே இந்த நில அபகரிப்பு முயற்சிகளின் பிரதான இலக்காகும்' என த ஒக்லன்ட் இன்ஸ்டிடியூட்டின் ஸ்தாபகரும் நிறைவேற்றுப்பணிப்பாளருமான அனுராதா மிட்டால் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இந்த ஆய்வறிக்கையின் பிரகாரம், நில அபகரிப்புக்களின் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் தற்போது 27 சதவீதமாக இருக்கும் சிங்கள மக்கள், அந்த மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 36 சதவீதத்தைத் தம்வசம் வைத்திருக்கின்றனர். அங்கு 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட நிலப்பரப்பு (41,164 ஏக்கர்) அபகரிக்கப்பட்டிருக்கும் நிலையில், கடந்த 10 வருடங்களில் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு இதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசனத்திட்டங்கள், துறைமுக நவீனமயமாக்கல், சக்திவலு உற்பத்தி, சுற்றுலாத்துறை மேம்பாடு என்பன உள்ளடங்கலாக 'அபிவிருத்தி' எனும் போர்வையில், 'சிங்களமயமாக்கல்' நடவடிக்கையின் ஓரங்கமாக இந்த நில அபகரிப்புக்கள் இடம்பெற்றுவருகின்றன.

அதேபோன்று தொல்லியல் திணைக்களம், வன இலாகா, மகாவலி அதிகாரசபை மற்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு அரச கட்டமைப்புக்கள் இந்த நில அபகரிப்பின் மூலம் இடம்பெறும் 'சிங்களமயமாக்கல்' நடவடிக்கையில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் 'ஆக்கிரமிப்பின் கீழ் திருகோணமலை' என்ற ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. 'தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் செறிந்துவாழும் பகுதிகளில் பௌத்த விகாரைகளை விஸ்தரிப்பதானது பௌத்தமயமாக்கலை மேற்கொள்வதற்கும், குடித்தொகைப்பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் தமிழ், முஸ்லிம் மக்களின் கலாசார சின்னங்களை அழிப்பதற்கும் வாய்ப்பேற்படுத்துகின்றது.

2009 ஆம் ஆண்டிலிருந்து குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் 3887 ஏக்கர் நிலப்பரப்பில் 26 விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று இலங்கை இராணுவத்தின் 7 பிராந்திய தலைமையகங்களில் ஐந்தை வட, கிழக்கு மாகாணங்களில் நிறுவியிருப்பதன் மூலம் இம்மாகாணங்கள் தொடர்ந்து உச்சளவில் இராணுவமயமாக்கப்பட்டுள்ளன. இது அப்பகுதிகளில் பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதற்கும், சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்கும், நிலங்களை அபகரிப்பதற்கும் உதவுகின்றது' எனவும் த ஒக்லன்ட் இன்ஸ்டிடியூட் தெரிவித்திருக்கிறது.

## பழிதீர்ப்பதற்காக தமிழ் அரசியல் கைதிகளை 30 ஆண்டுகளாக இலங்கை அரசாங்கம்

தேசிய சிறைக்கைதிகள் தின நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சுமார் 13 ஆயிரம் கைதிகளை மாத்திரமே தடுத்து வைத்திருக்கக்கூடிய இட வசதியினைக் கொண்ட சிறைக்கூடங்களுக்குள் 24 ஆயிரம் கைதிகளை திணித்து அடைத்து வைத்துக்கொண்டிருக்கின்ற நிலையிலேயே சிறைத்துறை இந்த கைதிகள் தின நிகழ்வை கடைபிடித்துவருகிறதென்பது சுட்டிக்காட்டத்தக்கது.

இருப்பினும் உணவு, நீர், சுகாதாரம் மற்றும் மருத்துவம் போன்ற அடிப்படை கட்டமைப்புகள் போதுமற்ற நிலையில் பெயருக்காக கொண்டாடப்படுகின்றதா இந்த தேசிய சிறைக்கைதிகள் தினம் என்கின்ற கேள்வி எழுகிறது.

இத்தனை மோசமான கட்டமைப்பை கொண்டியங்கும் சிறைக்குள்ளேயே சமூகத்தை நேசித்த எமது தமிழ் அரசியல் கைதிகள் 30 ஆண்டுகளாக வாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பது எத்தனை கொடூரமானது!

''எமது நாடு ஜனநாயக நாடு. நாம் கருணை அன்பு மிக்கதொரு பாரம்பரிய சமூக சமயத்தை சார்ந்தவர்கள். மறப்போம் மன்னிப்போம் என்பது எமது கொள்கையில் ஒரு அங்கம்'' என மேடை முழக்கம் செய்கின்ற அரசும் அதன் அதிகாரமும் தான் எமது தமிழ் அரசியல் கைதிகளை பழிதீர்க்கும் போக்கில் 30 ஆண்டுகளாக சிறைக்குள் தடுத்துவைத்துக் கொண்டிருக்கிறதா எனக் கேட்கின்றோம்.

இன்று தேர்தல் பரப்புரைகளாலும் எண்ணற்ற வாக்குறுதிகளாலும், நாடு நிரம்பித்ததும்பிக்கொண்டிருக்கிறது. ஆனபோதிலும், தமிழினத்தின் பெயரில் மூன்று தசாப்த காலங்களாக சிறையில் கொடுமை அனுபவித்துவரும் எமது தமிழ் அரசியல் கைதிகளின் நரக வாழ்க்கைக்கான முற்றுப்புள்ளியின் எல்லை இதுவரை தெரியவில்லை.

உண்மையிலேயே ஒரு ஜனநாயக நாட்டினுடைய சட்டங்களை அமுல்படுத்துகின்ற நீதித்துறையும் அதற்கு ஒப்ப இயங்குகின்ற சிறைத்துறையும் அரச இயந்திரத்தின் முக்கிய இரு பிரிவுகளாகும்.

இவை குற்றம் காணும் குடிமக்களை சீர்திருத்தி, குறிப்பிட்டதொரு காலத்துக்குள் மீண்டும் அவர்கள் சமூகத்துடன் சேர்ந்து வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் பொறுப்புக்குரிய நிறுவனங்களாகும்.

ஆனாலும், தமிழ் அரசியல் கைதிகளுடைய விடுதலை விடயத்திலே அரசும் அதன் இயந்திரங்களும் மாற்றான் தாய் மனப்போக்குடன் நடந்துகொள்வதன் நோக்கம் என்ன?

காலம் காலமாக கதிரையேறும் சிங்கள ஆட்சி அதிகாரங்கள், தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குச் சூரையாடும் கலாசாரத்துக்கு இனி மேலாவது முற்றுப்புள்ளியிட வேண்டும். மக்களினதும் சர்வதேசத்தினதும் பார்வைக் கோணங்களை திசை மாற்றும் கைங்கரியத்தை கைவிட வேண்டும்.

நிச்சயமாக இதற்கு மேலும், கால வீணடிப்புச் செய்யாமல் தமிழ் மக்களின் தீர்க்கப்பட வேண்டிய அவசர அடிப்படை விடயங்களுக்கு தீர்வினைக் கூற வேண்டும்.

குறிப்பாக, இனத்தின் பெயரில் நாளுக்கு நாள் வஞ்சிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் 10 தமிழ் அரசியல் கைதிகளினதும் விடுதலை விடயத்தில், அரசின் உண்மையான இறுதி நிலைப்பாட்டை பொதுவெளியில் தெரிவிக்க வேண்டும் என்பதை 'குரலற்றவர்களின் குரல்' மனிதநேய அமைப்பினராகிய நாம், இந்த ஆண்டு தேசிய சிறைக்கைதிகள் தின பகிரங்க கோரிக்கையாக முன்வைக்கின்றோம்.

அவ்வாறில்லையேல், இந்த நாட்டின் ஆட்சி அதிகாரங்களுக்கும் அதற்குத் துணை செய்யும் குடி மக்களுக்கும், தமிழினத்தின் சாபக் கேடு என்பது தவிர்த்தொதுக்க முடியாத ஒரு காலத்தின் நியதியாகும் என்பதை நினைவூட்ட கடமைப்படுகின்றோம் என குரலற்றவர்களின் குரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த ஊடக சந்திப்பில் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் முருகையா கோமகன், அரசியல் கைதியான பார்த்தீபனின் சகோதரி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

## என்னை எந்த கட்சித் தலைவர்களும்

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தமிழ் தேசிய பொது கட்டமைப்பின் வெற்றியை அல்லது இலக்கை உடைப்பதற்கு இப்போது பல சக்திகள் இறங்கியுள்ளன. இந்த நபர்களினால் இன்னும் சில தினங்களில் அல்லது தேர்தலுக்கு முதல் நாளிலோ என்னைப் பற்றி துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்படலாம். நான் தேர்தலில் இருந்து ஒதுங்கிவிட்டேன் என்று கூட அவர்கள் துண்டுப்பிரசுரங்கள், காணொளிகளை வெளியிடக்கூடும். இவை எதையும் மக்கள் நம்ப வேண்டாம்.

தமிழ் மக்களுக்கு நான் ஒன்று கூறுகின்றேன். நீங்கள் குழப்பமடையத் தேவையில்லை. விருப்பு வாக்கு, விருப்பத் தேர்வு என்கின்ற விடயத்தில் பலர் மக்களை குழப்பமடையச் செய்து வருகின்றனர். மக்களாகிய நீங்கள் எனது சங்கு சின்னத்துக்கு மட்டும் ஒரு புள்ளடியிடுங்கள் அவ்வளவுதான்.

இன்று இந்த பொது வேட்பாளர் என்கின்ற விடயம் இலங்கையில் மட்டுமல்ல, இந்தியா உள்ளிட்ட சில நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஏனென்றால் எங்கள் விடுதலைப் போராட்டத்தில் அகிம்சை ரீதியிலான, ஆயுத ரீதியிலான இராஜதந்திர செயற்பாட்டிலே கூர்மை பெற்றபோது எல்லோருமே இதை அவதானித்துக்கொண்டு இருக்கின்றார்கள். அவர்கள் எல்லோருமே தவறு விட்டிருக்கின்றார்கள்.

இலங்கை மட்டும் எங்களை ஏமாற்றவில்லை. இந்தியாவும் எங்களை ஏமாற்றி இருக்கின்றது. இறுதிப் போரில் இனப்படுகொலையை செய்வதற்காக பல நாடுகள் இலங்கைக்கு துணை போயிருக்கின்றது. எனவே அவர்கள் அனைவருக்கும் ஒரு மனச்சாட்சி இருக்கின்றது. இணைந்த வடகிழக்கிலே ஒரு அரசியல் தீர்வினை தமிழர்களுக்கு வழங்க அவர்கள் தவறியிருக்கின்றார்கள். அந்த தவறை சுட்டிக்காட்ட வேண்டிய உரிமை வடகிழக்கு மக்களுக்கு இருக்கிறது. அதை ஒரு ஜனநாயக வடிவமாக நாங்கள் காட்ட இருக்கின்றோம்.

தமிழ் தேசிய பொது கட்டமைப்பின் வேட்பாளராக நான் வரவேண்டும் என்று ஆசைப்படவில்லை. வேட்பாளராக என்னை தெரிவு செய்வதற்கு முன் நானே இரண்டு பேரை வேட்பாளராக முன்மொழிந்தேன். இறுதியாக சில மாற்றங்கள் ஏற்பட்டதன் காரணமாக நான் இதை ஏற்றிருக்கின்றேன்.

அனைவரும் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் அரசுக் கட்சியில் இருந்து வேறு அரசியல் கட்சியில் போட்டியிடுவது தமிழ் அரசு கட்சியை விட்டு விலகிச் செல்வதாக கருதப்படலாம். நான் இன்னுமொரு கட்சியில் அங்கத்துவம் பெறவில்லை. இப்பொழுதும் தமிழ் அரசுக் கட்சியில் தான் இருக்கின்றேன். நான் தமிழ் தேசிய கொள்கையுடையவன். கட்சியின் கொள்கையை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதே போன்று எனது தமிழ் தேசிய கொள்கையினையும் கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

### சஜித்தை ஆட்சி பீடமேற்றுவதன் மூலம்தான்

# தங்களின் விடியலையும், இருப்பையும் முஸ்லிம் சமூகம் தக்கவைத்துக் கொள்ள முடியும்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சஜித் பிரேமதாசஸ அவர்களை வெல்ல வைப்பதன் மூலம் தான் எங்களுடைய அபிலாசைகளை நாம் வென்றெடுக்க முடியும் என முன்னாள் முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகாரப் பணிப்பாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தெரிவித்தார்.

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெற விருக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் சாய்ந்தமருது காரியாலய திறப்பு விழாவும் பொது கூட்டமும் முன்னாள் முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகாரப் பணிப்பாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் (09) தலைமையில் அவருடைய இல்லத்தில் இடம்பெற்ற போது அங்கு தலைமை வகித்துப் பேசிய அவர், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் பேசி அவர் கூறியதாவது,

கடந்த ஆகஸ்ட் 4 ஆம் திகதி கட்சியின் உயர்பீடம் கூடிய போது, சஜித் பிரேமதாஸவோடு நாங்கள் இருக்கின்றோம். ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ அவர்கள் களமிறக்கப்பட்டு இருக்கின்றார் என்று தலைமைத்துவம் கூறியது. அப்போது நாங்கள் அந்தக் கூட்டத்திலே என்ன முடிவினை மேற்கொள்ள இருக்கின்றோம் என்று எல்லோரும் ஒவ்வொருவராக கருத்துக்களை தெரிவித்த போது, ஆக முன்னதாகவும் நாங்கள் அதாவது இந்த இயக்கம் சஜித் பிரேமதாஸவை கட்டாயமாக ஆதரிக்க வேண்டும் என்று எடுத்த முடிவின் பிரகாரம், எங்களின் தலைமைத்துவம் இந்த நாட்டிலே உள்ள மூளை முடுக்குகளிலே, ஒவ்வொரு இடத்துக்கும் சென்று சஜித் பிரேமதாஸ அவர்களின் வெற்றிக்காக, அவர் செய்கின்ற தியாகங்களையும் அதனுடைய செயற்பாடுகளையும் பார்த்து நாங்கள் பொறாமைப்படுகின்றோம். காரணம், அவர் தருகின்ற உற்சாகம், ஊக்கம் எல்லோரிடமும் கட்டளையைப் பிறப்பித்து, சஜித் பிரேமதாஸவை வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். அதற்கு இந்த இயக்கத்தில் இருக்கின்ற அத்தனை பேரும் பாடுபட வேண்டும். அப்போதுதான் எங்களது முஸ்லிம் சமூகத்தின் விடுதலையாக இருக்கட்டும் அல்லது எங்களுடைய தேவைப்பாடுகளாக இருக்கட்டும் அத்தனை விடயங்களையும் நாங்கள் பெற்றுக் கொள்வதற்கு எங்களுடைய சஜித் பிரேமதாஸ அவர்களை ஆதரிக்க வேண்டும் என்று ஒவ்வொரு வாரக் கூட்டங்களும், தொலைபேசி அழைப்புகளும் அழுத்தங்களும் எங்களுக்கு வந்து கொண்டே இருக்கின்றன. அதன் பிரகாரம் தான் நாங்களும் எங்களால்




முடியுமான எங்களது செயற்பாடுகளை இந்த இயக்கத்தின் ஊடாக நாங்கள் செய்து வருகின்றோம்.

அன்பின் தாய்மார்களே! என்னுடைய தேர்தலுக்காக நீங்கள் எவ்வளவு பாடுபட்டீர்கள். ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று என்னை வெல்ல வைப்பதற்காக இந்தத் தாய்க்குலங்கள் மிகவும் சிரமப்பட்டு, கல்முனை மாநகரத்தின் முதல்வராக்கினீர்கள். அதே போன்று, எதிரே வருகின்ற தேர்தலும் மிகவும் முக்கியமான ஒரு தேர்தலாக இருக்கின்றது. முஸ்லிம் சமூகத்தினுடைய எதிர்காலம் மற்றும் முஸ்லிம்களுடைய அத்தனை விடயங்களும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசஸவை வெல்ல வைப்பதன் மூலம் தான் எங்களுடைய அபிலாசைகளை வென்றெடுக்க முடியும். அது எம்மால் முடியும் என்பதை யாரும் மறந்து விட வேண்டாம்.

ஆகவே, அன்புக்குரிய தாய்மார்களே! சகோதர சகோதரிகளே! இந்த இயக்கத்தின் போராளிகளே! நீங்கள் அத்தனை பேரும் சஜித் பிரேமதாஸ அவர்களை ஆட்சி பீடத்துக்கு அமர்த்துவதன் மூலமாகத்தான் எங்களுடைய விடியலையும், இருப்பையும் முஸ்லிம் சமூகம் தக்கவைத்துக் கொள்ள முடியும் என்பதையும் நீங்களும் மறந்து விடாதீர்கள்.

கடந்த கால கொடுங்கோல் ஆட்சியாளர்கள் இந்த நாட்டில் உள்ள முஸ்லிம் சமூகத்திற்கு அவர்கள் செய்த துரோகங்களை நீங்கள் மறந்து விடக் கூடாது. கொரோனா நோயினால் பாதிக்கப்பட்ட அந்த சிறுவர்களைக் கூட விட்டு வைக்காமல் எரித்தார்கள். எங்களுடைய தாய்மார்கள் அழுதார்கள். இறைவனிடம் துஆக் கேட்டார்கள். இந்த அயோக்கியர்களை இறைவா பதவியில் இருந்து துரத்தி விடு என்று சொன்னார்கள். இரண்டு வருடங்கள் கழியவில்லை. அந்தப் பதவியில் இருந்து எங்களுடைய தாய்மார்களின் துஆக்களினால் ஆட்சி பீடங்களிலிருந்து ஏன் நாட்டை விட்டே துரத்தியடிக்கப்பட்டார்கள். அப்படிப்பட்ட நாங்கள் எதையும் மறக்கவில்லை. கொரோனா மாத்திரமல்ல, இந்த நாட்டினுடைய பொருளாதாரச் சீரழிவுகள் போன்றவைகளை நாங்கள் மறக்கவும் இல்லை. மன்னிக்கவும் மாட்டோம்.

ஆகவே போராளிகளே, இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலிலே சுபஹுத் தொழுகையைத் தொழுதுவிட்டு, இறைவனிடம் துஆவில் ஈடுபட்டு, அன்றைய தினம் நீங்கள் எல்லோரும் காலையிலேயே வாக்குச்சாவடிக்குச் சென்று நாங்கள் ஆதரிக்கின்ற எங்களுடைய வேட்பாளராகிய இந்த நாட்டினுடைய ஜனாதிபதியாக இருந்த மறைந்த ரணசிங்கப் பிரேமதாஸ அவர்களுடைய புதல்வர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். அவருடைய சின்னமான தொலைபேசி சின்னத்திற்கு நீங்கள் உங்கள் பொன்னான வாக்கினை அனைவரும் இட்டுச் செல்ல வேண்டும். நீங்கள் சஜித் பிரேமதாஸவுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தை படித்துப் பாருங்கள். காணி விடயங்களாக இருக்கலாம் அல்லது இளைஞர், யுவதிகளுடைய தொழில் வாய்ப்புகளாக இருக்கலாம் எல்லாவற்றையும் மிகத் தெளிவாக அந்த தேர்தல் விஞ்ஞாபனத்திலே சொல்லி இருக்கின்றார்.

ஆகவே, நண்பர்களே! உங்களிடம் நான் மிகவும் பணிவாக கேட்டுக் கொள்வது, எதிரே நடக்கவிருக்கின்ற ஜனாதிபதி தேர்தலில் நீங்கள் கட்டாயம் சஜித் பிரேமதாஸவினை வெற்றி பெறச் செய்து, எமது சமூகத்தின் பிடியினை மாற்றி அமைக்க இன்ஷா அல்லாஹ் நாம் எல்லோரும் புறப்படுவோம். சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிப்போம் என்றும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 50 லட்சம் வாக்குகளுக்கு மேற்பட்ட வாக்குகளை பெற்றுக் கொள்வார்

### சாய்ந்தமருதில் அசாத் சாலி

(நூருல் ஹுதா உமர்)

தேசிய பட்டியலில் பாராளுமன்றத்திற்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே நாட்டை காப்பாற்ற வந்தார். நாட்டு மக்கள் வாழத் தகுந்த வகையில் நாட்டின் நிலைமையை மாற்றியமைத்தார். அதன் பயனாக இன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 50 லட்சம் வாக்குகளுக்கு மேற்பட்ட வாக்குகளை பெற்றுக் கொள்வார் என்ற நம்பிக்கை உள்ளது என முன்னாள் ஆளுநர் அசாத் சாலி தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் கல்முனைத் தொகுதி ஐ.தே.க அமைப்பாளர் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீல் தலைமையில் நடைபெற்ற இயலும் ஸ்ரீலங்கா பிரச்ச





ரகூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

முழு நாடும் அனுரவிற்கு என்று சிலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மறு முனையில் சஜித் இப்போதே ஜனாதிபதியாகி விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறார். இவர்கள் வேடிக்கை பாத்திரங்கள். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முதிர்ச்சியானவர். இலங்கை வரலாற்று அதிகப்படியான வாக்குகளை பெற்று வெற்றிபெறப்போகும் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்கவே இருப்பார். என்றார்.

இந்நிகழ்வில் மகா சங்கத்தினர், சர்வ மதத் தலைவர்கள், அமைச்சர் அலி சப்ரி, தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லா, ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி தலைவர் அன்வர் முஸ்தபா, பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# 1989 ,1994 மற்றும் 1999 இல் அஷ்ரப் யாருடன் இருந்தார்?

## நமது முஸ்லிம் தலைமைகள் யாருடன் இருக்கிறார்களோ அந்த அணி தோற்பது உறுதி

### சாய்ந்தமருதில் அமைச்சர் அலி சப்ரி

(நூருல் ஹுதா உமர்)

கேஸ் இல்லாத நிலையில் பல்பொருள் அங்காடிகளில் கூட விறகுகள் விற்கப்பட்டன. விவசாயம் செய்வதற்கு உரம் இருக்கவில்லை. மத்திய வங்கியில் 20 மில்லியன் டொலர்கள் மட்டுமே இருந்தன. 20 மில்லியன் நாட்டு மக்களுக்கும் ஒரு டொலர் வீதம் வழங்குவதற்குக் கூட அது போதாது. ஆட்சியைப் பொறுப்பேற்பதற்காக சஜித் பிரேமதாசவுடன் உரையாடுமாறு அன்றிருந்த ஜனாதிபதி கோட்டாபய எனக்கு அறிவித்தார். நான் அவருடன் பேசினேன். அவர் கோரியதற்கு ஏற்ப மத்திய வங்கி ஆளுநர் மற்றும் திறைசேரி செயலாளருடன் கலந்துரையாட சந்தர்ப்பம் பெற்றுக் கொடுத்தேன். நாடு பயங்கரமான நெருக்கடியில் இருப்பதாக கூறி சஜித் பின்வாங்கினார். ஆனால் இன்று நாட்டை ஒப்படைக்குமாறு கோருகின்றனர். நாடு நெருக்கடியில் இருந்து மீண்டுள்ள நிலையில், நாம் பரீட்சார்த்தமாக வேறொருவருக்கு பொறுப்பைக் கொடுக்க போகிறோமா? என அமைச்சர் அலி சப்ரி





கேள்வியெழுப்பினார்.

சாய்ந்தமருதில் கல்முனைத் தொகுதி ஐ.தே.க அமைப்பாளர் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீல் தலைமையில் நடைபெற்ற இயலும் ஸ்ரீலங்கா பிரச்சார கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

1989 ,1994 மற்றும் 1999 இல் மாமனிதர் அஷ்ரப் யாருடன் இருந்தார்? நமது முஸ்லிம் தலைமைகள் யாருடன் இருக்கிறார்களோ அந்த அணி தோற்பது உறுதி. சமுதாயத்தை காட்டிக் கொடுக்கும் முஸ்லிம் தலைவர்களின் பின்னால் செல்ல வேண்டாம். நாம் சுயநலத்திற்காக அரசியல் செய்யவில்லை. கடந்த 5 வருட காலத்தில் அரசாங்கத்திற்குள் இருந்து நாம் செய்த போராட்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அது எனக்கு, இறைவனுக்கும் தான் தெரியும்.

இறந்தவர்களின் உடல்களை கட்டாயப்படுத்தி தகனம் செய்ய முடியாது என சட்டம் கொண்டு வரப்படுகிறது. கடந்த காலத்தில் செய்த தவறுக்கு அரசாங்கம் என்ற வகையில் மன்னிப்புக் கோரினோம். தெற்கிலுள்ள மக்களும், மலையக தமிழ் மக்களும் ஜனாதிபதியை வெல்ல வைக்க தயாராக உள்ள நிலையில், நாமும் அந்த வெற்றியில் பங்காளர்களாவோம் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மகா சங்கத்தினர், சர்வ மதத் தலைவர்கள், தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லா, ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி தலைவர் அன்வர் முஸ்தபா, பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஆளுநர், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# முஸ்லிம்களுக்கு எதிரான சகலரும் சஜித்துடனேயே உள்ளனர்

## சாய்ந்தமருதில் அமைச்சர் அலி சாஹிர் மௌலானா

**நூருல் ஹுதா உமர்**

இன்று நாட்டு மக்களுக்கு தடையின்றி மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை தேவைகள் கிடைக்கிறது. நாட்டு மக்களுக்கு படிப்படியாக சலுகை கிடைக்கிறது. மக்கள் சந்தோஷமாக வாழக்கூடிய நிலைமை காணப்படுகிறது. அனைத்து இன மக்களும் பண்டிகைகளை சந்தோஷமாக கொண்டாடினர். இந்த நிலைமை தொடர வேண்டும் என அமைச்சர் அலி சாஹிர் மௌளானா தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் கல்முனைத் தொகுதி ஐ.தே.க அமைப்பாளர் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீல் தலைமையில் நடைபெற்ற இயலும் ஸ்ரீலங்கா பிரச்சார கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,






அதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சி நீடிக்க வேண்டும். இன்று முஸ்லிம்களுக்கு எதிராக வைத்தியர் சாபியை நெருக்கடிக்குள் தள்ளிய சன்ன ஜயசுமன, சம்பிக்க ரணவக, தயாசிறி ஜயசேகர போன்றவர்களும் ரிஷாதுக்கு எதிராக குரல் தொடுத்த ஆனந்த சாகர தேரர் மற்றும் ரிஷாதை ஒரு பயங்கரவாதி அவரை கைது செய்வேன் என்று சொன்ன மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவும் இன்று சஜித்துடனேயே உள்ளனர்.

அதேபோல் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பதற்கு துணைபோன நாலக கொடஹேவா போன்றவர்களும் இன்று சஜித் அணியிலேயே உள்ளனர். எனவே, மக்கள் சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டியது அவசியம். என்றார்.

இந்நிகழ்வில் மகா சங்கத்தினர், சர்வ மதத் தலைவர்கள், தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லா, ஸ்ரீலங்கா ஜன நாயக கட்சி தலைவர் அன்வர் முஸ்தபா, பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஆளுநர், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# நற்பிட்டிமுனை நூலகத்தில் எழுத்தறிவு தின நிகழ்வு





**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபைக்குட்பட்டகரைவாகு மேற்கு நற்பிட்டிமுனை பொது நூலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த உலக எழுத்தறிவு தின சிறப்பு நிகழ்வு நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸின் ஆலோசனையின் பேரில் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீமின் வழிகாட்டலில் நூலக வாசகர் வட்டத்தின் ஒத்துழைப்புடன் ஒழுங்கு செய்யப்பட்டு, நூலகர் எஸ்.எம்.ஆர். அமினுதீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இரண்டு சமாதான பாலர் பாடசாலைகளைச் சேர்ந்த 40 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இச்சிறப்பு நிகழ்வில் நூலகத்தின் வாசகர் வட்ட தலைவர் ஏ. அப்துல் கபூர், செயலாளர் எஸ். சிராஜுதீன் ஆகியோரும் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி வைத்தனர்.

# ஆரையம்பதியில் இடம்பெற்ற இரத்த தான நிகழ்வு - ௨0௨௪









**எஸ்.எஸ்.அமிர்தகழியான்**

மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி அனுசரணையுடன் இரத்த தான நிகழ்வு இன்று 2024.09.11 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 9.00 மணி தொடக்கம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் திருமதி.தெட்சணகௌரி தினேஷ் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இளைஞர்கள், விளையாட்டு கழக உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டு உயிர் காக்க உதிரம் கொடுத்து இந்நிகழ்வில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான செயலமர்வு ..!



**(அ . அச்சுதன்)**

2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ் மொழி பேசும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான செயலமர்வானது திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன் அவர்களின் தலைமையில் (10) மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வாக்களிப்பு நிலையங்களில் சிரேஸ்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் பங்களிப்புகள், கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் வாக்குப்பதிவுக்கு முன் பூர்த்தி செய்யப்பட வேண்டிய விடயங்கள் குறித்து மாவட்ட அரசாங்க அதிபரினால் இதன் போது தெளிவூட்டப்பட்டது.

இச்செயலமர்வில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



# மனித வியாபாரம் தொடர்பான விழிப்புணர்வு

**(ஹஸ்பர் ஏ.எச்)**

பதவி ஸ்ரீபுர பிரதேச செயலகத்தில் தொழிலுக்காக வெளிநாடு செல்லவுள்ள பொதுமக்களுக்கான ஆட்கடத்தல் மற்றும் மனித வியாபாரம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கானது பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் (11) நடைபெற்றது.

தேசிய கடத்தல் தடுப்பு பணிக்குழுவின் மேற்பார்வையின் கீழ் IOM மற்றும் AMCOR நிறுவனத்தால் இவ் விழிப்புணர்வு கருத்தரங்கானது நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், வளவாளராக AMCOR நிறுவன உத்தியோகத்தர், மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தரும் கலந்து கொண்டனர்.





# தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சம்பந்தமாக ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை





**(அஷ்ரப் ஏ சமத்)**

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரமும் ட்ரான்ஷனஸ் பேரன்ஸ் இண்டநெசனல் ஸ்ரீலங்காவும் இணைந்து 50க்கும் மேற்பட்ட மும்மொழியிலான ஊடகவியலாளர்களுக்கு தேர்தல் செலவினங்களை எவ்வாறு ஒழுங்குபடுத்துதல் ?; சம்பந்தமான கருத்தரங்கொன்று 10.09.2024 கொழும்பு 7 ல் உள்ள கெக்டர் கொப்பேகடுவ விவசாய பயிற்சி ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன், தேர்தல் கண்கானிப்பின் செயற்பாட்டாளர் மன்சுல கஜநாயக்க, மற்றும் செல்வி பிரியசினி ஆகியோர்களும் கலந்து கொண்டனர்.

இங்கு விரிவுரையாற்றிய மன்சுல கஜநாயக்கக கூறியதாவது..

இலங்கையின் தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம் 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம் ஒவ்வொரு தேர்தலிலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்களுக்கு பொருந்தும்.

இச் சட்டத்தின் ஏற்புடமை உள்ளூராட்சித்; தேர்தல்கள், மாகாண சபைத் தேர்தல்கள், பாராளுமன்றத் தேர்தல்கள், அத்துடன் ஜனாதிபதி தேர்தல்கள். உள்ளடக்கப்படுகின்றது.

பெறப்பட்ட உதவு தொகைகளும், செலவினமும் அது பற்றிய விபரத்திரட்டு அறிக்கை

தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் ஒவ்வொரு

அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி, சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளர்களும் தங்களது சார்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்தல் செலவுகள், அனைத்து நன்கொடைகளும் அல்லது உதவு தொகைகளும் பற்றிய விபரத்திரட்டொன்றை தேர்தல் ஆணையகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

அதன் பின்னர், அறிக்கைகள் பெறப்பட்டதாக தேர்தல் ஆணையகம் அறிவிப்பொன்றை

வெளியிடும், அதன்படி மக்கள் அவ் அறிக்கைகளினை சரிபார்க்கலாம்.

குற்றங்கள் மற்றும் தண்டனைகள் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக செலவு செய்தல், தடை செய்யப்பட்ட நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளல், தவறான தகவல்களை பதிவேடுகளில் பதிவு செய்தல் ஆகியவை சட்ட விரோத செயல்களாகும்.

இலங்கையின் சனத்தொகை படி ஒரு ஜனாதிபதி வேட்பாளர் அதிகூடிய 186 கோடி ரூபாய் மட்டுமே செலவு செய்ய முடியும். சுயாதீன வேட்பாளர் எனின் அவர் தனியே செலவிட முடியும். ஓர் கட்சி என்ற கட்சி 60 வீதமும் வேட்பாளர் 40 வீதம் செலவு செய்ய முடியும்.

பிரித்தானிவில் ஓர் பிரதமர் தேர்தல் வேட்பாளர் இருப்பின் அவர் அரச அலுவலகத்திற்குள் சென்று அங்கு ஒரு மெழுகுதிரியை கூட அவர் பற்றவைக்க முடியாது ஆனால் இலங்கையில் பதவியில் இருக்கும் ஜனாதிபதி சகல அதிகாரங்களை பாவிக்கும் உரிமை இருக்கின்றது. அவர் வானுர்தியும் பாவிக்கப்படுகின்றது. இலங்கையில் எதிர்காலத்தில் இச்சடம் திருத்தியமைக்கப்படல் வேண்டும்.

ஜனாதிபதி வேற்பாளர்கள் தத்தமது சொத்துரிமைப் பிரகடனத்தினை வெளிப்படுத்திவிட்டு அவர் தேர்தல் செலவினங்கள் மற்றும் கணக்கரிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும். அவர் மேலதிகமாக சொத்துக்கள் இருப்பின் அவர் இலங்கை இறைவரித் திணைக்களத்தில் வரி செலுத்தியுள்ளார என்பதையும் சொத்துரிமைப் பிரகடனத்தினையும் பெற்று ஊடகவியலாளர்கள் கண்கானிக்க முடியும்.

அரசியல்வாதிகள், அரசியல் கட்சிகள் மற்றும் அவர்களின் தேர்தல் பிரச்சாரங்கள் சமரசம் செய்யப்படும் போது, அது நாட்டின் நிர்வாகம் மற்றும் ஜனநாயகத்தின் தரத்தையும் நேரடியாகப் பாதிக்கின்றது. இது வேட்பாளர் போட்டி மற்றும் தேர்தலினையும் பாதிக்கின்றது. எடுத்துக்காடடக, பல்வேறு தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் தங்களது சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் போது ரகசியமாக வழங்கப்படும்.

குறிப்பிடத்தக்க பண நன்கொடைகளானது தேர்தல் செயல்முறைகளுக்கு தேவையற்ற முறையில் பாதிப்பினை ஏற்படுத்தலாம். ஆனால் தேர்தல் நடைமுறைக்கு மாத்திரம் இச்சேதம் ஏற்படுவதில்லை. அதாவது அரசியலாக்கத்திற்கும் தீங்கு விளைவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதிகள் பொது நலன்களுக்காக தங்களது சேவைகளை வழங்குவதனை விட தேர்தல் பிரச்சாரங்களுக்காகப் பணம் கொடுத்தவர்களுக்கு நன்மை செய்வதில் கவனம் செலுத்துவதனாலேயாகும்.

எனவே, தேர்தல்களில் அரசியற் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் ஏற்படுத்தப்படும் செலவுகள் மற்றும் நன்கொடைகள் வெளிப்படைத் தன்மை வாய்ந்ததாக இருத்தல் அவசியம்.

தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துவதற்கான நோக்கங்கள் தேவையற்ற செல்வாக்கைத் தடுத்தல் - நிதி பெறும் வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் பொதுமக்கள் நலன்கள் காட்டிலும் நன்கொடையாளர்களின் நலன்களுக்காகச் செயல்படுகின்றது.

தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுக்கும் சம தளத்தை வழங்குதல் -

அரசியலுக்கு புதிய வேட்பாளர்கள், நிதி அடிப்படையில் தாழ்ந்த நிலையில் உள்ள வேட்பாளர்கள் மற்றும் நிதி பெற போராடும் குழுக்கள் போன்றவர்கள் பணக்கார வேட்பாளர்களுடன் போட்டியிட வேண்டிய நிலை காணப்படல்.

அதிகமாகச் செலவு செய்வதைத் தடுத்தல் - செலவு வரம்புகள் இல்லாத காரணங்களால் தேர்தல்களின் போது அதிகச் செலவு ஏற்படுத்துதல் மற்றும் அவையாவன வாக்குகளை வாங்குவதற்கும் வழிவகுக்கின்றன.

பொதுச் சொத்துக்களினை தவறாக பயன்படுத்தப்படுவதை தடுத்தல் - வெளிப்படைத் தன்மை இல்லையென்றால் சக்திவாய்ந்த வேட்பாளர்கள் மற்றும் அரசியற் கட்சிகள் அரசு திட்டங்கள், நிதி, அதிகாரிகள், வாகனங்கள், கட்டிடங்கள் போன்றவற்றை எளிதில் தவறாகப் பயன்படுத்தலாம்.

தேர்தல் செலவினத்தின் மீதான கட்டுப்பாடு தேர்தலை நிர்ணயித்த பின்னர், அத்தகைய தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் கலந்தாலோசனையின், தேர்தலுக்காக அனுமதிக்கப்பட்ட தொகையானது வர்த்தமானி ஒன்றின் மூலம் நிர்ணயிக்கப்படுகிறது.

ஒவ்வொரு தேர்தலுக்கும் சம்மந்தப்பட்ட தொகுதியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கையை அத்தேர்தலுக்காக நிர்ணயிக்கப்படக்கூடியவாறான தொகையினால் பெருக்கப்படும்.

அத்தகைய அனுமதிக்கப்பட்ட தொகையானது அந்தத் தேர்தல் தொடர்பாக ஒரு வேட்பாளர் செலவிடக்கூடிய அதிகபட்சத் தொகையாகும். நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளல் மீதான தடை ஒரு அரசாங்கத் திணைக்களத்திடமிருந்து, அரச நிறுவனங்கள், ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம்,

வெளிநாட்டு அரசாங்கங்கள், சர்வதேச ஒழுங்கமைப்பிடமிருந்து, 50 க்கும் அல்லது அதற்கு மேற்பட்ட அதிகமான வெளிநாட்டு உரிமையைக் கொண்ட கம்பெனிகள் மற்றும் தங்கள் அடையாளத்தை வெளிக்காட்டாதவர்கள் வழங்கும் நன்கொடைகளினை ஏற்றுக் கொள்ளுதலோ அல்லது பெறுதலோ தடை செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் செலவின ஒழுங்குமுறைகள் தொடர்பான முன்னேற்றங்கள் புதிய சட்டத்தின் முறையான அமுல்படுத்தும் செயல்முறை ஆரம்பிக்கப்பட வேண்டும், அதற்காக மிகவும் வலுவான கண்காணிப்பு பொறிமுறைகளை உருவாக்குதல் அவசியமாகும். இதில், அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், மற்றும் மக்கள் மத்தியில் அதிக விழிப்புணர்வும் புரிதலும் இருத்தல் வேண்டும்.

---

# மண்வளத்தையும் இயற்கை அழிவையும் தடுக்கும் முகமாக பனை நடுவோம்




**(க.ருத்திரன்)**

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி பகுதியானது வருடாந்தம் இயற்கையின் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டுவருகிற நிலையில் சட்டவிரோதமாக அகழப்படும் மண்வளத்தையும் இயற்கை அழிவையும் தடுக்கும் முகமாக 'பனை நடுவோம் பயன்பெறுவோம்' எனும் தொனிப்பொருளில் பனை விதைகள் நடும் நிகழ்வு நடைபெற்றது.

15000 பனைவிதை நடும் நிகழ்வை சித்தாண்டி சிகன்டி அறக்கட்டளை மற்றும் சித்தாண்டி பகுதிகளிலுள்ள ஆலயங்கள்இ விளையாட்டுக்கழகங்கள் பொது அமைபுக்களின் பங்களிப்புடன் சித்தாண்டி சந்தனமடு ஆற்றங்கரை பகுதிகளில் பனைவிதைகள் நடுபணிகள் இடம்பெற்றது.

இன்றைய பனைவிதை நடும் நிகழ்வுக்கு சித்தாண்டி பகுதிகளிலுள்ள பல ஆலயங்களின் அறங்காவல் தலைவர்கள்இ விளையாட்டுக்கழகத்தின் தலைவர்கள்இ மயிலத்தமடு மாதவணை பண்ணையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது சித்தாண்டி சிகண்டி அறக்கட்டளையின் தலைவர் மு.முரளிதன் கருத்து தெரிவிக்கையில்;

ஆற்றுப்பகுதிகளில் சட்டவிரோதமாக அகழப்படும் மணல் அகழ்வினால் சித்தாண்டியில் வருடாவருடம் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது அத்துடன் மண்ணரிப்பு உள்ளிட்ட பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றது இவற்றைத்தடுக்கும் முகமாக பலவருட காலமாக 10 லட்சத்துக்கு மேல் பனை விதைகளை நட்டுள்ளோம்.

அத்துடன் அப்பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்களுக்கு நீதிமன்றம் ஊடாக பனைவிதைகளை நட்டு வளர்க்கும் பொறுப்பையும் வழங்கியுள்ளதுடன் அவ்வாறான செயற்பாடுகளும் நடைபெறுகின்றது.

தற்போது சட்ட விரோத மணல் அகழ்வு நடைபெறுகின்றது என்றார். இன்றைய தினம் 15000 பனை விதைகள் நடப்பட்டுள்ளது.

---

# இலங்கை வங்கியின் இணைப்பு கிளை திறப்பு





**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

இலங்கை வங்கியின் இணைப்பு கிளையொன்று நுவரெலியா ஹைபொரஸ்ட் இல.3 நகரத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இலங்கை வங்கியின் மத்திய மாகாண உதவி முகாமையாளர் சரத் விஜயசிங்க, இலங்கை வங்கியின் நுவரெலியா பிரதேச பிராந்திய முகாமையாளர் பி.விஸ்வநாதன், இலங்கை வங்கி கந்தப்பளை கிளை முகாமையாளர் புத்திக்க இதுல நாகரவசின் பிரதனாத்வியன் ஆகியோரால் இக்கிளை திறந்து வைக்கப்பட்டது.

ஹைபொரஸ்ட் பிரதேச மக்களின் நலன்கருதியே இங்கு இலங்கை வங்கியின் இணைப்பு கிளையொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் வங்கியொன்று இல்லாமையால் மக்கள் பல்வேறு சௌகரியங்களை சந்தித்து வந்துள்ளனர். பணத்தை வங்கியில் இடுவதற்கு வங்கியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கும் சுமார் 14 கிலோ மீற்றர் பயணம் செய்து இராகலை நகருக்கே செல்ல வேண்டியிருந்தது இந்நிலையில் இலங்கை வங்கி ஊடாக இணைப்பு கிளையொன்று இங்கே திறந்து வைக்கப்பட்டுள்ளமைக்கு இப்பிரதேச மக்கள் மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளனர்.

---

# களுதாவளை மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை சாதனை




★மாகாணமட்ட விளையாட்டுப் போட்டி 2024★

கிழக்கு மாகாண மட்ட விளையாட்டு நிகழ்வானது மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் கடந்த 5 நாட்களாக நடைபெற்றது.

நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண மட்ட போட்டிகளின் முடிவில் களுதாவளை ம.வி தேசிய பாடசாலை

ɪஎ12 தங்கப்பதக்கம்
ɪஏ05 வெள்ளிப்பதக்கம்
ɪஐ09 வெண்கலப் பதக்கம்

என்று மொத்தமாக 26 நிகழ்வுகளில் வெற்றி பெற்று 95 புள்ளிகளுடன் கிழக்கு மாகாணத்தில் அதிக தங்கப்பதக்கங்களையும், அதிக புள்ளிகளை பெற்றுக்கொண்ட பாடசாலையாக சாதித்துள்ளது.

★31 மாணவர்கள் தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.★

குறிப்பாக ஆண்கள் பிரிவில் 51 புள்ளிகளையும், பெண்கள் பிரிவில் 44 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது.

இம்முறை 06 புதிய மாகாண சாதனைகள் இம்மாணவர்களால் படைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக கிழக்கு மாகாண மட்ட விளையாட்டு நிகழ்வில் முதல் நிலை பாடசாலையாக வருவது குறிப்பிடதக்கது.

# ஆப்கானில் போர்க் குற்றம் இழைத்த ஆஸி. படையினரின் பதக்கங்கள் பறிப்பு!





**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

**(ஆப்கானிஸ்தானில் போர்க்குற்றம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு ஆஸி படைகளில் பணியாற்றிய ராணுவ தளபதிகளின் பதக்கங்கள் பறிக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலியாவின் பாதுகாப்பு அமைச்சர் ரிச்சர்ட் மார்லஸ் தெரிவித்துள்ளமைக்கு, படைத்தரப்பில் பலத்த கண்டனங்கள் எழுந்துள்ளன)**

ஆப்கானிஸ்தானில் 2005 மற்றும் 2016 க்கு இடையில் அவுஸ்திரேலிய சிறப்புப் படைகளின் தவறான நடத்தைக்கு தளபதிகளை பொறுப்பேற்க வேண்டும் என்பது மேஜர் ஜெனரல் பால் பிரேரட்டனின் (Paul Brereton) தனது போர்க்குற்ற விசாரணையில் பரிந்துரைக்கப்பட்டு உள்ளது.

39 ஆப்கானியர்களின் சட்டவிரோத கொலைகளில் சுமார் 25 அவுஸ்திரேலிய சிறப்பு சேவை படைப்பிரிவு மற்றும் கமாண்டோ ரெஜிமென்ட் துருப்புக்கள் ஈடுபட்டதாக அவர் கண்டறிந்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் போர்க்குற்றம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட பல முன்னாள் அவுஸ்திரேலிய ராணுவ தளபதிகளின் பதக்கங்கள் பறிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் ரிச்சர்ட் மார்லஸ் (Richard Marles) 11/9/24 இல் தெரிவித்துள்ளார்.

பிரெட்டன் அறிக்கைக்கு உட்பட்ட குற்றச்சாட்டுகள், இந்நாட்டு வரலாற்றில் அவுஸ்திரேலிய போர்க்குற்றங்



கள் பற்றிய மிகக் கடுமையான குற்றச்சாட்டுகள் என்று மார்லஸ் பாராளுமன்றத்தில் கூறினார்.

போர்க்குற்றங்கள் நடந்ததாகக் கூறப்படும் காலக்கட்டத்தில் அவர்கள் செய்த சேவைக்காகப் பெற்ற பதக்கங்களை மீளப் பெற அந்தப் படைகளின் தளபதிகளுக்கு கோரியுள்ளார். ஆயினும் தனியுரிமை காப்பு சட்டங்களை மேற்கோள்காட்டி எத்தனை பேருக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார் அல்லது அவர்களின் தரவரிசையை அடையாளங்களை அவர் காட்டவில்லை.

இதேவேளை தளபதிகளின் பதக்கங்கள் அகற்றப்பட்டதை அவுஸ்திரேலிய சிறப்பு விமான சேவை சங்கத்தின் தலைவர் மார்ட்டின் ஹாமில்டன்-ஸ்மித் கடுமையாக கண்டனம் செய்தார். இது ஆப்கானிஸ்தானில் பணியாற்றிய வீரர்களின் தைரியம் மற்றும் தியாகத்திற்கு துரோகம் என அவர் விபரித்துள்ளார்.





ஆப்கானில் எங்கோ ஒரு தொலைதூர கிராமத்தில் இந்த தளபதிகள் பார்க்காத மற்றும் அறியாத, அவர்களின் கண்காணிப்பில் இல்லாத ஒரு சட்டவிரோத செயல் நடந்திருக்கலாம். நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் போர்க்களத்தில் இந்த இளம் அதிகாரிகளின் தைரியமான தலைமையை அரசாங்கத்தின் முடிவு கவனிக்கவில்லை என்று ஹாமில்டன்-ஸ்மித் தனது அறிக்கையில் காட்டமாக தெரிவித்துள்ளார்.

ஆயினும் அதிகாரிகளின் தவறுகள் மட்டுமின்றி, போர்க்குற்றம் காரணமாகவே பதக்கங்கள் பறிக்கப்பட்டன என்று அமைச்சர் மார்ல்ஸ் பின்னர் விளக்கி கூறியுள்ளார்.

உண்மையில் அங்கே என்ன நடந்தது என்று தெரியும். அதைப் பற்றி அறிந்திருந்தோம். ஆயினும் அப்போதய அரசு உடனடியாக செயல்படவில்லை அல்லது பரிந்துரைக்கவில்லை. அதுவே பிரச்சினை என்று அமைச்சர் மார்ல்ஸ் செய்தியாளர்களிடம் கூறினார்.

2013 இல் ஆப்கானிஸ்தானில் ஆஸி துருப்புக்களுக்கு குஅகு கேப்டனாக கட்டளையிட்டவரும், தற்போதய எதிர்க்கட்சி சட்டமியற்றுபவர் ஆண்ட்ரூ ஹாஸ்டி, (Opposition lawmaker Andrew Hastie) போர்க் குற்றங்களுக்கு அவுஸ்திரேலிய அரசியல் தலைவர்களும் இராணுவ தலைமையும் பொறுப்பேற்க வேண்டும் என்றார்.

இக்குற்றச்சாட்டுகளால் அவுஸ்திரேலிய துருப்புக்கள் தார்மீக தைரியம் இழந்து ஏமாற்றமடைந்தனர் என்று நான் நம்புகிறேன். இது கான்பரா வரை அனைத்து வழிகளிலும் கண்டனங்களுடன் சென்றுள்ளது என்று ஹஸ்டி கூறினார்.

அக்காலத்தில் ஆப்கானிஸ்தானில் அவரது இராணுவ சேவைக்காக ஹஸ்டி அங்கரிக்கப் படவில்லை. அதனால் பதக்கங்கள் பறிக்கப்பட்ட அதிகாரிகளில் அவர் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அப்பாவிகளின் இரத்தத்தை சிந்தியதாகக் கூறப்பட்டவர்கள் மட்டுமே அதற்குப் பொறுப்பு. யாரையும் மன்னிக்கவோ அல்லது கண்டிக்கவோ நான் இதைச் சொல்லவில்லை என்றும் ஹஸ்டி கூறினார்.

2023 ஆம் ஆண்டில், முன்னாள் குஅகு வீரர் ஆலிவர் ஷூல்ஸ் போர்க் குற்றம் சாட்டப்பட்ட இந்த வீரர்களில் முக்கியமானவர். 2012 இல் ஆப்கானில் உருஸ்கான் மாகாணத்தில் கோதுமை வயலில் ஒரு தீவிரவாதியை சுட்டுக் கொன்றதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவின் மிகவும் அங்கரிக்கப்பட்ட வாழும் போர் வீரர் பென் ராபர்ட்ஸ்-ஸ்மித் குஅகு கார்போரல் ஆக இருந்தபோது நான்கு ஆப்கானியர்களை சட்டவிரோதமாக கொன்றிருக்கலாம் என்று ஒரு சிவில் நீதிமன்றம் கண்டறிந்தது. அவர் மீதும் இதுவரை போர்க்குற்ற கிரிமினல் குற்றம் சாட்டப்படவில்லை.

இதுவரையில் ஆப்கானிஸ்தானில் போர்க்குற்றத்தில் ஈடுபட்டதாக எந்த அவுஸ்திரேலிய வீரர்களும் தண்டிக்கப்படவில்லை. ஆனால் அவுஸ்திரேலிய போர்க்குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை அம்பலப்படுத்திய இரகசிய தகவலை ஊடகங்களுக்கு கசியவிட்டதற்காக முன்னாள் இராணுவ வழக்கறிஞருமான டேவிட் மெக்பிரைடுக்கு மே மாதம் கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஆப்கான் போர்க்குற்றங்களை வெளியிட்ட இராணுவ வழக்கறிஞரான டேவிட் மக்பிரைட்டி அங்கு இரண்டு சுற்றுப் பயணங்களைச் செய்திருந்தார். ஆப்கானிஸ்தான் குடிமக்கள் கொல்லப்பட்டனர் என்பதனை அவரே முதன்முதலில் வெளிப்படுத்தினார்.



ஆயினும் அவர் இராணுவ இரகசியங்களை திருடி வெளியிட்டார் எனவும் குற்றஞ் சாட்டப்பட்டார். இத்தகவலை அம்பலப்படுத்தியதை மக்பிரைட் கடந்த வருடம் ஏற்றுக் கொண்டிருந்தார். தற்போது ஆப்கானிஸ்தானில் அவுஸ்திரேலியாவின் போர்க் குற்றங்களை அம்பலப்படுத்திய சட்டத்தரணி டேவிட் மக்பிரைட்டிற்கு அவுஸ்திரேலிய நீதிமன்றம் ஐந்து வருடங்கள் 8 மாதம் சிறைத்தண்டனை விதித்துள்ளது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விசாரணைகளின் போது அவுஸ்திரேலிய படையினர் ஆப்கானிஸ்தானில் 38 பொதுமக்களை கொலை செய்தமை தெரியவந்தது.

இவர் எவ்வித துன்புறுத்தலை எதிர்கொண்டவர் அல்ல என்றாலும், தற்காலத்தில் சிறையில் அடைக்கப்பட்ட முதல் அவுஸ்திரேலிய விசில்ப்ளோவர் (Whistle Blower) ஆவார். ஆயினும் ஜனநாயக நாட்டில் உண்மையை தெரிவிப்பது தனது தார்மீக கடமை என தான் கருதியதாக டேவிட் மக்பிரைட் தெரிவித்துள்ளார்.

---

# உலக அரங்குகளில் எமது குரல் ஓங்கி ஒலிக்க மக்கள் கூட்டம் என்ற உண்மையை நிலைநிறுத்த தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்போம்

## மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை கோரிக்கை

**(ந.குகதர்சன் )**

தமிழ் மக்கள் அனைவரும் தமிழ்ப் பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரின் சங்கு சின்னத்திற்கு வாக்களித்து தமது வரலாற்று கடமையை நிறைவேற்ற வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை கோரிக்கை முன்வைத்துள்ளது.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் பொருளாளர் நா.புவனசுந்தரம் வியாழக்கிழமை (12) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வட, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் மக்களிடையே இன்று ஒரு மறுமலர்ச்சி பரிணமித்திருக்கின்றது. உலக அரங்குகளில் எமது குரல் ஓங்கி ஒலிக்க நாம் ஒரு பலமான மக்கள் கூட்டம் என்ற உண்மையை நிலைநிறுத்துவது அவசியம்.

ஈழத் தமிழர்கள் கடந்த 15 ஆண்டுகளாக அரசியல் அனாதைகளாக அலைந்து திரிகிறார்கள். நாம் நம்பிய அனைவருமே தேர்தல்களின் பின்னர் எம்மை ஏமாற்றியே வருகிறார்கள். தேர்தலில் வாக்குறுதி கொடுத்த யாருமே அதன் பின்னர் எம்மை மதித்ததில்லை. இம்முறை எமக்கு ஒரு புதிய தெம்பு பிறந்துள்ளது. வெற்றி பெறப்போவதில்லை எனத் தெரிந்து கொண்டே நாம் ஒரு வேட்பாளருக்கு வாக்களிக்கப் போகிறோம்.

நாம் நம்பிய அனைவரும் எம்மைக் கைவிட்ட போதும், நாம் எமது உரிமைகளுக்கான போராட்டத்தைக் கைவிடவில்லை என்பதையும், அதற்காகப் போராடும் எமது உணர்வுகளை இன்னும் இழந்து விடவில்லை என்பதையும் அத்துடன் எமது வலிகளையும் வேதனைகளையும் இந்த உலகுக்கு உரக்கச் சொல்லப் போகிறோம். வெற்றி பெறும் வரை எமது தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட உணர்வுகளை அடுத்த அடுத்த தலைமுறைக்கு ஊட்டுவது எமது வரலாற்றுக் கடமை.

உள்நாட்டுக்கு உள்ளேயும், சர்வதேச சமூகத்தோடு இணைந்தும், எமது இராஜதந்திர, புத்திபூர்வமான அணுகுமுறைகள் ஊடாகவும் எமது மக்களின் வலிகளுக்கு நிவாரணம் வழங்கவோ, அவர்களது நம்பிக்கையை கட்டியெழுப்பவோ இயலாதிருந்திருக்கின்றோம் என்பதை பொறுப்புடன் ஏற்றுக்கொள்ளுகின்ற சந்தர்ப்பம் ஒன்றை இந்தத் தேர்தல் எங்களுக்குத் தந்திருக்கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் தமிழ்த்தேசியப் பரப்பிலுள்ள பெரும்பான்மைக் கட்சிகளினாலும் சிவில் சமூக அமைப்புக்களினாலும் முன்மொழியப்பட்டுள்ள தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டுமென்று மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஏகமனதான தீர்மானமெடுத்துள்ளது. தமிழ்ப் பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரின் சங்கு சின்னத்திற்கு வாக்களித்து தமது வரலாற்று கடமையை நிறைவேற்ற வேண்டும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


ஜனாதிபதித்
தேர்தல்
2024
மில்லியன் கணக்கில் வாக்குகளை
பெற்று வெற்றிபெற
மில்லியன் கணக்கில்
வாக்காளர், பார்வையாளர்களைக்
கொண்ட சுபீட்சம் ஊடகத்தில்
குறைந்த விலையில்
விளம்பரங்களை வெளியிடுங்கள்
077 664 5232 / 077 311 2601